# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8092389

1. District மாவட்டம்: Tiruvannamalai PS: காவல்நிலையம்: VC AC Tiruvannamalai Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 12/2019 Date: நாள் 16-07-19

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Cr PC Sections பிரிவுகள்: 102

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை Before 1930 Hrs on 15-07-2019

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16-07-2019 Time : நேரம் 1500 Hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16-07-2019. Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் No.1 Joint Sub Registrar office Tiruvannamalai 2 kms South

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. T. Krishnamoorthy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. P. Thulasi

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12.05.1977 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் District Inspector, All offices Vellore & Tiruvannamalai Districts. (g) Address : முகவரி District Collector's Office Vellore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. L. Srinivasan age 51/2019 S/o Lakshmi kandhan, Sub Registrar Grade I No. 1, Joint Sub Registrar office Tiruvannamalai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

Separate Sheet enclosed

... u/s as mentioned at item No.2 registered the case ... Rank ................ to take up the Investigation / Refused ... on point of jurisdiction.

... correctly recorded and a copy given to the Complainant / ...

Signature of the Officer in-charge, Police Station

16/07/19

R. ARULPRASAD
Inspector of Police
V&AC Tiruvannamalai

16/7/19

On 16-07-2019 at 1700 hrs

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 16.07.2019-ஆம் தேதி பிற்பகல் 1500 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்த போது திரு. து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் அவர்கள் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்.T.கிருஷ்ணமூர்த்தி, ஆய்வுக்குழு அலுவலர்,வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. நாள்: 16.07.2019. அய்யா, பொருள்: திடீர் ஆய்வு சோதனை - எண்-1, திருவண்ணாமலை நகர சார்பதிவாளர் அலுவலகத்தில் 15.07.2019 அன்று கூட்டு திடீர் சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் - ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. பார்வை: கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள். நான் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரம், கதவு எண்.5/1, துர்கையம்மன் கோயில் தெருவில் தனியார் கட்டிடம் முதல் மாடியில் இயங்கி வரும் 1.எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறுவதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில் இன்று 15.07.2019 மாலை சுமார் 19.30 மணிக்கு நான் மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து திருவண்ணாமலை 1-எண் இணைசார்பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு சார் பதிவாளர் நிலை-1 திரு.இல.சீனிவாசன் மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது 1) திரு.இல.சீனிவாசன், (51/2019), த/பெ இலட்சுமிகாந்தன் (லேட்), சார் பதிவாளர் நிலை-1, 2)திரு.அ.கிருஷ்ணமூர்த்தி, (53/2019) த/பெ அண்ணாமலை, இளநிலை உதவியாளர் 3) திரு.அ.இராமஜெயம், (33/2019), த/பெ அயோத்தி, அலுவலக உதவியாளர் மற்றும் 4).திரு.சி.இளையபல்லவன், (25/2019), த/பெ சின்னக்கண்ணு, கேமரா ஆப்ரேட்டர் பணியாளர் ஆகியோரும் மற்றும் டாகுமெண்ட் ரைட்டர் மற்றும் பொது

மக்கள் சிலர் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் இருந்தார்கள்.பின்னர் வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் என்னுடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள், சார் பதிவாளர் நிலை-1 திரு.இல.சீனிவாசன் அவர்களை சோதனையிட அவரது சட்டையின் மேல் பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது அதை எண்ணிப்பார்க்க அதில் ரூ.5,900/- இருந்தது. பின்னர் அவரை ஒதுங்கி வரச்சொல்லி பார்த்ததில் அவர் காலுக்கடியில் கத்தையாக பணத்தை மறைத்து வைத்திருந்தார். அதை எண்ணிப்பார்க்க ரூ.18,500/-ஐ இருந்தது. பின்னர் அவரது இருக்கைக்கு எதிரே கணிணி வைத்திருந்த மேஜையின் கீழே ரூ.1,000/- (500x2=1000) கேட்பாரற்று கிடந்தது. அதேபோல பதிவேடுகள் வைத்திருக்கும் அறையின் வாயிற்படி அருகே ரூ.500/- (500x1=500) கேட்பாரற்று கிடந்தது. மேற்படி கேட்பாரற்று கிடந்த பணத்தை பற்றி கேட்க யாரும் உரிமை கோர முன் வரவில்லை. பின்னர் இளநிலை உதவியாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களை சோதனையிட அவர்களிடம் ரூ.360/- தக்க முகாந்திரம் கூறியதால் பணம் கைப்பற்றப்படவில்லை. பின்னர் அலுவலக உதவியாளர் திரு.இராமஜெயம் அவர்களிடம் ரூ.60/- தக்க முகாந்திரம் கூறியதால் பணம் கைப்பற்றப்படவில்லை. பின்னர் கேமரா ஆப்ரேட்டர் திரு.இளையபல்லவன் அவர்களிடம் ரூ.180/- தக்க முகாந்திரம் கூறியதால் பணம் கைப்பற்றப்படவில்லை. சார்பதிவாளர் நிலை-1 திரு.இல.சீனிவாசன் அவர்களிடம் சோதனையின் போது ரூ.24,400/- வைத்திருந்தற்கான முகாந்திரம் கேட்க அவரால் தக்க முகாந்திரம் கூற முடியவில்லை. அதனால் சார்பதிவாளர் திரு.இல.சீனிவாசன் அவர்களால் தக்க முகாந்திரம் கூற முடியாத காரணத்தால் அவர் வைத்திருந்த பணம் ரூ.24,400/- கைப்பற்றப்பட்டது. அதே போல இரண்டு இடங்களில் கேட்பாரற்று கிடந்த பணம் ரூ.1,500/- கைப்பற்றப்பட்டது. ஆகமொத்தம் பணம் **ரூ.25,900/-** கைப்பற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக திருவண்ணாமலை 1.எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை கூட்டு திடீர் தணிக்கையின் போது இருந்த பத்திர எழுத்தர்கள் மற்றும் அங்கு இருந்தவர்கள் தணிக்கை செய்யப்பட்டது.

| வ. எண். | பத்திர எழுத்தர் மற்றும் அங்கு இருந்தவர்கள் (பெயர் மற்றும் விலாசம்) | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | திருப்பி கொடுக்கப்பட்ட பணம் / கைப்பற்றப்பட்ட பணம். |
|---|---|---|---|
| 1. | திரு.அ.செல்வ நாராயணன், (27/2019) த/பெ அரிகிருஷ்ணன், பத்திர எழுத்தர், எண்.11/98A, உதயநந்தல் கிராமம், தென்மாத்தூர் அஞ்சல்,திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.73977-50106) | ரூ.42,300/- (தக்க முகாந்தரம் கூறியதால் பணம் ரூ.29,300/- திரும்பி கொடுக்கப்பட்டது) | தக்க முகாந்திரம் கூறாததால் பணம் ரூ.13,000/- கைப்பற்றப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 2. | திரு.இரா.சதீஷ், (27/2019) த/பெ இராமன், பத்திர எழுத்தர், எண்.50, கன்னப்பந்தல் கிராமம், கொளக்குடி அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.96888-47773) | ரூ.73,600/- | தக்க முகாந்திரம் கூறாததால் பணம் ரூ.73,600/- கைப்பற்றப்பட்டது |
| 3. | திரு.பா.சீனிவாசன், (23/2019) த/பெ பாலன், பத்திர எழுத்தர் குமாஸ்தா, எண்.143/32, பேயகோபுரம், 6-வது தெரு, திருவண்ணாமலை (கைபேசி எண்.96299-91014) | ரூ.1,610/- | தக்க முகாந்திரம் கூறியதால் பணம் திரும்ப கொடுக்கப்பட்டது. |
| 4. | திரு.சு.இரகு, (29/2019) த/பெ சுந்தரமூர்த்தி, எண்.337, அரசமரத்தெரு, மல்லவாடி கிராமம் மற்றும் அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.87541-88869) | ரூ.10/- | -do- |
| 5. | திரு.க.நடேசன் (51/2019) த/பெ கந்தசாமி கவுண்டர், எண்.244, கிரிவலம் ரோடு, அடிஅண்ணாமலை கிராமம் மற்றும் அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.94435-15128) | ரூ.4,800/- | -do- |
| | கைப்பற்றப்பட்ட மொத்த பணம் | -- | **ரூ.86,600/-** |

பின்னர் சார் பதிவாளர் நிலை-1 திரு.இல.சீனிவாசன் அவர்களிடம் சார் பதிவாளர் அலுவலகத்தின் அலுவலக வருகை பதிவேட்டை கேட்க, அவர் எடுத்து ஆஜர் செய்தார். அது ஜூலை 15-ஆம் தேதி பார்வையிட, அதில் சார் பதிவாளர் திரு.இல.சீனிவாசன், இளநிலை உதவியாளர் திரு.அ.கிருஷ்ணமூர்த்தி, அலுவலக உதவியாளர் திரு.இராமஜெயம் ஆகியோர் கையெழுத்திட்டு இருந்தனர். மேற்படி வருகை பதிவேட்டை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதில் நான், சார் பதிவாளர் திரு.இல.சீனிவாசன் மற்றும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை ஆகியோர் கையொப்பம் செய்தோம். பின்னர் தனி நபர் பணம் இருப்பு பதிவேடுகேட்க அவர் எடுத்து ஆஜர் செய்தார் அதில் பக்கம் 5-ல், 15.07.2019-ஆம் தேதியில் திரு.இல.சீனிவாசன் அவர்கள் ரூபாய்.100/-, இளநிலைஉதவியாளர் திரு.அ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ரூ.170/-, தகவல் தொகுப்பு பணியாளர் இந்திராகாந்தி அவர்கள் ரூ.100/- மற்றும் அலுவலக

உதவியாளர் திரு.இராமஜெயம் அவர்கள் ரூ.80/- வைத்திருப்பதாக பதிவு செய்திருந்தார்கள். மேற்படி பதிவேட்டை கைப்பற்றி அதில் நான், சார் பதிவாளர் திரு.இல.சீனிவாசன் மற்றும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை ஆகியோர் கையொப்பம் செய்தோம். பின்னர் "அ" கணக்கை பற்றி கேட்க அவர் 15.07.2019-ஆம் தேதி மொத்தம் 26 ஆவணங்களில் 25 ஆவணங்கள் புதியதாகவும், ஒரு ஆவணம் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களிடம் இருந்து வரப்பெற்ற ஆவணத்துடன் சேர்த்து மொத்தம் பதிவு கட்டணம் ரூபாய் 4,15,082/- ஆன்லைன் மற்றும் POS (Point of Sale) மூலம் வசூல் செய்து "அ" பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது. பின்னர் "டி" கணக்கில் ரூபாய் 8,899/- மற்றும் உட்பிரிவு கட்டணம் ரூபாய்.1,580/-, குறை முத்திரை தீர்வை கட்டணம் ரூபாய்.1,85,838/-, குறுந்தகடு கட்டணம் மொத்தம் ரூபாய் 1250/-, தமிழ்நாடு திருமண பதிவு கட்டணம் ரூபாய்.330/-, பிறப்பு, இறப்பு பதிவு சான்று கட்டணம் இல்லை. மேற்படி அனைத்து கட்டணங்கள் ஆன்லைன் மற்றும் POS (Point of Sale) மூலம் வசூல் செய்யப்பட்டது என்று கூறினார். அரசாங்க உத்தரவுப்படி 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணமாக அரசு கட்டணம் வசூல் செய்வது இல்லை என்று கூறினார். மேற்படி 6 தாள்கள் ஆவணங்களை கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட அதில் முதல் பக்கத்திலும், கடைசி பக்கத்திலும் நான், சார்பதிவாளர் திரு.இல.சீனிவாசன் மற்றும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்து மேற்படி ஆவணத்தை கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி திருவண்ணாமலை 1.எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில்தில் 15.07.2019-ஆம் தேதி இரவு 2345 மணிக்கு இருதுறை திடீர் கூட்டு தணிக்கை முடிக்கப்பட்டது. இந்த செயல்முறையின் நகல் திருவண்ணாமலை நகர சார்பதிவாளர் நிலை-1 திரு.இல.சீனிவாசன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.மேற்படி சார்பதிவாளர் திரு.இல.சீனிவாசன் அவர்களிடமிருந்து மேல் சட்டை பாக்கெட்டில் ரூ.5,900/- மற்றும் காலுக்கடியில் மறைத்து வைத்திருந்தது ரூ.18,500/-) ஆக மொத்தம் கைப்பற்றப்பட்ட பணம் 24,400/- சார்பதிவாளர் அவர்களின் இருக்கைக்கு எதிரே இருந்த கணிணி வைத்திருந்த மேஜையின் கீழே கேட்பாரற்று கிடந்த பணம் 1000/-, பதிவேடுகள் வைத்திருக்கும் அறையின் வாயிற்படி அருகே கீழே கேட்பாரற்று கிடந்த பணம் 500/- மற்றும் பத்திர எழுத்தர் மற்றும் பத்திர விற்பனையாளரிடம் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.86,600/- ஆக மொத்தம் ரூ.1,12,500/- கைப்பற்றப்பட்டது.இன்று 16.07.2019-ல் பிற்பகல் 15.00 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொது மக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கேட்டு பெற்ற கணக்கில் வராத கையூட்டு என்று கருதப்படும் மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத, சந்தேகத்திற்கிடமான மொத்த பணம் ரூ.1,12,500/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன்.

மேற்கொண்டு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sd:XXXX (திரு.து.கிருஷ்ணமூர்த்தி), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir, Received the Complaint and the enclosures and registered a case in Tiruvannamalai Vigilance and Anti Corruption Crime No. 12/2019 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 and 102 CrPC on 16.07.2019 at 1500 Hrs. Sd(xxxx) R.Arulprasad, Inspector of Police, Vigilance and Anti Corruption, Tiruvannamalai.

The Original FIR along with the Original typed complaint of Tr.T.Krishnamoorthy, Inspection Cell Officer, Vellore and Tiruvannamalai Districts is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Tiruvannamalai and a Copy of FIR submitted to the Director, V&AC, Chennai-16.

16/07/2019
Inspector of Police
V&AC, Tiruvannamalai.